www.tamilarangam.net



# தியாகிகள் தினம்.

# ஜூன் 19

மக்களுக்காகப்போராடி இலட்சியப்பாதையில் மரணித்த எமது ஆற்றல் மிகு தோழர்களுக்கும் சகஇயக்கப்போராளி களுக்கும் அறியாயமாகப் பலிகொள்ளப்பட்ட பொது மக்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் தினம்.

மானுடவர்க்கத்தின் மனிதப்பண்புகளுடன், அமைதி, சமாதானம், ஜனநாயகம் நிறைந்த சமதர்ம வாழ்வை தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க போராடி மரணித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர். க. பத்மநாபாவும் இன்னும் பன்னிரு தோழர்களும் 19. 06. 1990 ல் சென்னையில் வைத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.
இத்தினம் ஈழமக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணியின் இரண்டாவது காங்கிரசில் தியாகிகள் தினமாகப்பிரகடனப் படுத்தப்பட்டு உலகெங்கும் வாழும் தமிழ்பேசும் மக்களால் நினைவுகூரப்பட்டு வருகிறது.

தமிழ்பேசும் மக்கள் இடைவெளியற்ற இன்னல்களை தமிழ்ப்பயங்கரவாதிகளூடாக அனுபவித்து இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைகளாக...

சமாதானம், அமைதி என்பதெல்லாம் வெறும் கானல்நீரா கிப்போய்விட்ட துர்ப்பாக்கிய நிலையில் கொலை, கொள்ளை, பட்டினிச்சாவு, வறுமை என்னும் வலுக்கட்டா யமான வாழ்க்கை முறைக்குள் திணிக்கப்பட்டிருக்கிறார்கள்.



குருட்டுத்துப்பாக்கி ஏந்தும் வரட்டுச்சித்தாந்தம் கொண்ட முரட்டு வாதிகளால் சரடுகள் நிறைந்த கரடுமுரடான இடிபாடுகளுக்கு மத்தியில் இருட்டு வாழ்க்கையில் செக்கா டும் மாடுகள் போல், செம்மறி ஆடுகள் போல்
செல்லாமல் பொற்காலம் காண்பதற்கு....
விலங்குகளினால் விலங்கிடப்பட்டு நிலங்களற்று, நிறங்க ளற்று, நிலையிழந்து பலமிழந்து மலங்க விழித்து கலங்கிநிற் கும் மக்களுக்கு கலங்கரை விளக்காய்...
அக்கினிக்குஞ்சுகளான தியாகிகளின் தியாகங்கள், இலட்சி யப்பாதையில் பதித்த கால்தடங்ளாய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
சர்வதேசக்கிளைகள் ஒன்றியம்.
**EPRLF**
**19.06.1995**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்